# உச்ச நீதிமன்றம் நடத்தும்
# சிறப்பு மக்கள் நீதிமன்றம்

திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர், முதன்மை மாவட்ட நீதிபதி மாண்புமிகு திருமதி. ஜெ.ஜூலியட் புஷ்பா அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

மாண்புமிகு இந்திய உச்ச நிதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் சமரச தீர்வு காண வருகிற ஜூலை **29** முதல் ஆகஸ்ட் **08** வரை சிறப்பு மக்கள் நீதிமன்றம் நடத்த மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி, வழக்குரைஞர்கள் மற்றும் வழக்குதரப்பினர்கள் தங்களது வழக்குகளை சமரசமாக முடிக்க திருவள்ளூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு முன்போ அல்லது இணையதள வசதி மூலமாகவோ பங்கேற்று, சமரசமுறையில் தீர்வு காணலாம். நீதிமன்ற முத்திரைக் கட்டணம் முழுவதுமாக திரும்ப வழங்கப்படுவதும், இறுதி மற்றும் செயல்படுத்துவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதும் இதன் சிறப்பம்சங்கள் ஆகும். எனவே, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் தங்களது வழக்குகள் ஏதேனும் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால் அந்த வழக்குகளை சமரச முறையில் சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் தீர்வு காணலாம். சம்பந்தப்பட்ட நபர்கள் தங்களது வழக்கு விவரங்களை, அருகில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் செயல்படும் சட்ட உதவி மையத்தில் தெரிவிக்கலாம். திருவள்ளூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவினை, 044-27660120 என்ற தொலைபேசி மூலமும், dlsatiruvallur1@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ளலாம். மேலும், மாநில சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் உதவி எண் 044-25342441 மூலமும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

24.6.24

செயலாளர்
மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு,
திருவள்ளூர்